செய்திப் பணிப்பாளர் / செய்திப் பதிப்பாசிரியர் 21.04.2017

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : மார்ச் 2017


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**


2017 மார்ச் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2017 பெப்ருவரி மாதத்தில் 8.2% இருந்து 2017 மார்ச் மாதத்தில் 8.6% ஆக சற்று அதிகரித்துள்ளது என தெரிவித்தார். 2016ஆம் ஆண்டின்போது மார்ச் மாதத்தில் ஆகக் குறைந்த விலை மட்டம் பதிவாகியதுடன் இது, 2017 மார்ச் மாதம் பொருட்டு பதிவாகிய பணவீக்கத்தில் அவதானிக்கப்பட்ட சற்று அதிகரிப்புக்கு பிரதான காரணமாக கருதப்பட முடியும். 2017 மார்ச் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு முறையே 4.9%, 3.8% ஆக இருந்ததுடன், 2016 மார்ச் மாதத்தில் நிலவிய ஆகக் குறைந்த விலை மட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் 2016 மார்ச் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 0.2%, 2.0% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 பெப்ருவரி மாதத்தில் பதிவாகிய 119.9 இருந்து 2017 மார்ச் மாதத்தில் 119.5 ஆக குறைந்துள்ளது. இது, முந்திய மாதமான 2017 பெப்ருவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.4 சுட்டெண் புள்ளி மற்றும் 0.3 சதவீத குறைவொன்றைக் காட்டுகிறது. 2017 பெப்ருவரி மாதத்திற்கான தே.நு.வி.சு. 119.9 ஆக இருந்தது. இந்த மாதாந்த மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.38%ஆல் குறைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.03% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் வீழ்ச்சிக்கு காரணம் அரிசி, தேசிக்காய், வாழைப்பழம், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, மைசூர் பருப்பு, செத்தல் மிளகாய் மற்றும் மிளகாய்த் தூள் ஆகியவற்றின் விலை வீழ்ச்சியேயாகும். எனினும், சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதியானது தேங்காய், மரக்கறி, பப்பாசி, சீனி, தேங்காய் எண்ணெய், மாம்பழம், கருவாடு மற்றும் வெள்ளைப்பூடு என்பன பொருட்டு பதிவாகியது.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மார்ச் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’, ‘ஆடையும் காலணியும்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். மேலும், ‘உணவகமும் ஹோட்டல்களும்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் மிகச் சிறிதளவு அதிகரிப்பு பதிவாகியதுடன் முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘களியாட்டமும் கலாசாரமும்’ ஆகிய பிரிவுகள் பொருட்டு செலவுப் பெறுமதியில் மிகச் சிறிதளவு வீழ்ச்சி பதிவாகின. ‘வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, ஏனைய எரிபொருள்கள், ‘சுகாதாரம்’, ‘போக்குவரத்து’, ‘தொடர்பாடல்’ மற்றும் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின் மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |

பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்